நவம்பர் 2025

திராவிட வாசிப்பு

வாசிப்பும் மீள்வாசிப்பும்

"The hidden agenda behind Lifestyle Coaching"

Repackaging Rightwing Ideology

வணக்கம்.

இந்த இதழுக்காக பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதித்தந்த தோழர்களுக்கு எங்களது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

திராவிட வாசிப்பு குறித்த உங்களது மேலான கருத்துகளை, விமர்சனங்களை எதிர்பார்க்கிறோம். கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் கருத்துகளை சொல்லுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். நன்றி!

உங்கள் படைப்புகளையும், கருத்துகளையும் இந்த மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்: dravidavaasippu@gmail.com

கட்டுரைகளை திராவிட வாசிப்பு ஆன்லைன் பக்கத்திலும் வாசிக்கலாம்: https://blog.dravidiansearch.com/

இதுவரை வெளியான திராவிட வாசிப்பு மின்னிதழ்களை “கிண்டிலில்” வாசிக்க: https://www.amazon.in/s?i=digital-text&rh=p_27%3ADravida%2BVaasippu&s=relevancerank&text=Dravida+Vaasippu&ref=dp_byline_sr_ebooks_1

இதுவரை வெளியான திராவிட வாசிப்பு மின்னிதழ்களை “ஆன்லைனில்” வாசிக்க: https://drive.google.com/drive/folders/1-6Sk8TylSzrCfiU0BJ-_Osvh7DRFCl0z?usp=sharing

இப்படிக்கு,

திராவிட வாசிப்பு Editorial Team:

- (அருண் ஆஷ்லி, அசோக் குமார் ஜெ, அஷ்வினி செல்வராஜ், தினேஷ் குமார், ஜெகன் தங்கதுரை, கதிர் ஆர்.எஸ்., மதுமலர், மனிதி தெரசா, இராஜராஜன் ஆர். ஜெ, டிமோத்தி, யூசுப் பாசித், விக்னேஷ் ஆனந்த், விஜய் ஜி.எஸ், பிரபு கணேஷ்)

திராவிட மாடலும் பெண்களும் - லோகநாயகி

அறிவுக்கு மகுடம் சூட்டிய அறிவுத்திருவிழா – Rajarajan RJ

அறிவுத் திருவிழா - சுந்தரவாணன் பாண்டியன்

The Hidden Agenda Behind “Lifestyle Coaching”: Repackaging Right-Wing Ideology – Tam Femme

டூட் - Genz தலைமுறையின் மொழியில் பெரியாரின் குரல் – Rajarajan RJ

Rosa Parks — “Do I?” - Nagammal Sethuraman

“Where Do We Belong?” – A Glimpse Into Today’s India - Nagammal Sethuraman

திராவிட மாடலும் பெண்களும் - லோகநாயகி

(All South Indian women belong to Dravidian stocks. There are no Aryan stocks in the female gender here. Definitely, Dravidian stock includes transgender people also.)

இந்தியாவில் வாழும் பெண்களின் வரலாறில் இந்த ஆரியர்கள் பெண்களோடு இந்தியாவிற்குள் கைபர் போலன் கணவாய் வழியாக வரவில்லை.

அதற்கு முன்பு இங்கு வாழ்ந்த பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து வணிகம் செய்த வரலாறு நம்மிடம் இருக்கிறது சங்கப் புலவர்களில் பெண்கள் புலவர்களாக இருந்திருக்கிறார்கள்.அவ்வையார்,காக்கினைக்கினியார் போன்றோரின் பாடல்கள் பள்ளிக்கல்வியில் இருக்கிறது.அனைவரும் படித்தோம்.படிக்கிறோம்.

ஆண்களுடன் இணைந்து உலகுடன் வணிகத்தொடர்போடு பெண்கள் இங்கு வாழ்ந்திருக்கிறார்கள். இங்கு வளர்ந்த சமூகம் கட்டிடக்கலை,வணிகம்,வாழ்வியல் என அனைத்திலும் நாகரீகமாக வாழ்ந்து வந்த சமூகம் என கீழடி ஆய்வு ஆதிச்சநல்லூர் ஆய்வுகளால நிரூபிக்கப்பட்டு உள்ளது.தமிழ்ச் சமூகம் ஆரிய வரவுக்குப்பின் பெரும் பண்பாட்டு வீழ்ச்சியை சந்தித்தது.ஒரு நாகரீக வீழ்ச்சிக்குள் சென்றிருக்கிறது.அந்த பண்பாட்டு , நாகரீக வீழ்ச்சி தான் இன்றளவும் பெரும்பான்மை சாதி இந்துக்களின் வீடுகளிலும் உள்ள , எந்த கேள்வியும் யாரும் கேட்டு விடாமல் அப்படியே பின்பற்ற வேண்டிய ஹிந்து மத சாஸ்திர ,சம்பிரதாயங்கள் ஆகும்.

மனு தான் இங்கு தீண்டாமையின் துவக்கம்.ஜாதியுணர்வு தான் இந்தியாவில் வெறுப்புணர்வின் துவக்கம்.புகழ்பெற்ற தமிழ் மன்னர்கள் பலர் இங்கு வாழ்ந்தார்கள் .ஆனால் பெண் விடுதலை மறுப்பாளர்களாக ஆரிய அடிவருடிகளாக தேவதாசி வாழ்வியல் முறையையும்,அடிமை முறையையும் பாதுகாப்பவர்களாக இருந்தனர்.இராஜ ராஜசோழன் காலத்தில் ஊர் தாசி,சேரி தாசி ,அந்தபுர தாசிகள் என பெண்கள் மன்னர் ,அரசவையின் போகப்பொருளாக நடத்தப்பட்டனர்.

ராணி களாக இருக்கக்கூடிய பெண்களுக்கு மட்டுமே
சில கலைகளை கற்றுக் கொள்ளும் வாய்ப்பு இருந்தது.

ஆங்கிலேயர்களை எதிர்த்து போர் செய்த பெண்கள் என அறியப்படும் வேலுநாச்சியார் ஆக இருக்கட்டும், ஜான்சிராணி ஆக இருக்கட்டும். அவர்களிடமும் பார்ப்பனீயத்தை எதிர்க்கும் வலிமை இல்லை.அவர்கள் வீரர்களாக வாள் வீசியது போல் ,தன் சொந்த சமூகத்துடனும் பெண்ணுரிமைக்காக போராட்டம் செய்ய வேண்டியிருந்தது. வீரம் செறிந்த ஜான்சி ராணிக்கு தத்தெடுக்கும் உரிமை மறுக்கப்பட்டது .

குருகுலக்கல்வியில் சூத்திரர்கள், அவர்ணர்கள், பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது.ஆங்கில ஆட்சியில் கல்வி நிலையங்கள் வந்தாலும் இந்த சமூகத்தடையை உடைக்க நாம் போராட வேண்டியதிருந்தது.

சுதேசி இயக்கமாக தேச விடுதலை கேட்டவர்களுடன், இங்கு நிலவிய கல்வி மறுப்பு நிலைக்கு எதிராக பார்ப்பனீய எதிர்ப்புக்குரல்களும் இந்தியா முழுவதும் எழுந்தன.

சென்னை மாகாணத்தில் பார்ப்பனரல்லாதோர் ஒருங்கிணைப்பில் முதல் அடையாளமாக அயோத்திதாசர் குறிப்பிடப்படுகிறார். அவர் பட்டியலின மக்களை ஜாதியற்ற திராவிடர்கள் என குறிப்பிட்டார். திராவிடர்கள் இந்துக்கள் அல்ல என முழங்கினார். இன்றைய காலகட்டம் போல் திராவிட எதிர்ப்புக்கென நுழைந்திருக்கும் தலித்துகள் எனும் சொல்லாடலில் அவர் அழைக்கவில்லை.

பார்ப்பன எதிர்ப்புக்குரல்கள் இணைந்து எல்லா மாநிலத்திலும் இயங்க ஆரம்பித்தன.இங்கும் அயோத்திதாசர் தலைமையில் தென் இந்திய நல உரிமைச்சங்கம் உருவானது.இது பின்னாளில் நீதிக்கட்சி ஆனது.

இந்தியாவிலேயே முதல் பெண் மருத்துவர் உருவான இடம் தமிழ் நாடாக இருந்தது. பெண் படிக்க வருவதால் தங்களால் படிக்க முடியவில்லை என்ற அய்யர்கள் மத்தியில்

திரைச்சீலைக்கு அந்தபக்கம் அமர்ந்து முத்துலெட்சுமி மருத்துவம் படித்தார் .சமஸ்கிருதம் தெரிந்தால் தான் மருத்துவம் படிக்க முடியும் எனும் நிலையும் இருந்தது.

அவர் படிக்க அன்றைய நீதிக்கட்சியின் ஆட்சி ,பனகல் அரசரின் முற்போக்கு சிந்தனை தான் காரணமாக இருந்தது. சமஸ்கிருத எதிர்ப்பு ,வேத மறுப்பு ,பார்ப்பனீய ஒழிப்பு சிந்தனையோடு நீதிக்கட்சி ஆட்சி அரியணையில் இருக்கும் போது தான் இது சாத்தியமானது.

19 ம் நூற்றாண்டு துவக்கத்தில் பெரியார் அவர் மீது காட்டப்பட்ட பார்ப்பனீய ஆதிக்கத்தின் விளைவாக இந்தியாவின் ஜாதியக்கட்டமைப்பின் கொடூரத்தை உணர்ந்து தானே கிளர்ந்தெழுந்து பார்ப்பனீயத்தின் வேர் எங்கிருக்கிறதென தேடிப்புரிந்து கடவுள் இல்லை கடவுள் இல்லை கடவுள் இல்லவே இல்லை, என முச்சந்துக்கு ஒரு கோவில் உள்ள தமிழகத்தில் முழங்கினார்.

எல்லோரும் பேச்சின் இடையே மலத்தால் அடித்தனர்.பைத்தியம் என்றனர். ஆனால் சில ஆண்டுகளில் அவர் குரல் எழுச்சி பெற்று அவர்போல் சிந்திக்கும் கருஞ்சட்டைப்படை இங்கு உருவானது.

அவர் ஜாதி,கடவுள் ,ஆணாதிக்க கூறுகளை களையெடுக்கும் தீவிர ப்ரச்சாரங்களை மேற்கொண்டார். பெரியாரின் பெண் விடுதலைக்கருத்துகளை இன்று உலகநாடுகள் கொண்டாடுகின்றனர்.

பகுத்தறிவு என்பது உலகம் முழுக்க ஒரு மனிதன் இன்னொரு மனிதனை ஒடுக்கும் சிந்தனைக்குள் அடிபட்டுக் இருக்கிறது.19 ஆம் நூற்றாண்டில் வந்த பெரியார் பகுத்தறிவு என்பது மனிதனை மனிதனாக மதிப்பது,அதுக்கு தடையாக இருக்கும் அனைத்தையும் உடைப்பது எனும் மனித நேயப்பாதைக்குள் பகுத்தறி என உலகையே நகர்த்தியிருக்கிறார்.

பெரியார் தன் திராவிட இன விடுதலைக்கு எதிரி என பார்ப்பனீயத்தை தான் அறிவித்தார். பெண் ஏன் அடிமையானாள்? எனும் தொகுப்பு அவர் 1930-40 களில் எழுதியவை.அதில் சமூக அளவில் பெண்ணை முடக்கும் கற்பு நெறி,காதல்,திருமணம் ,விபச்சாரம்,மறுமணம் உள்ளிட்ட பெண்ணுக்கு எதிரான கருத்துருவாக்கங்களை உடைத்து பெண்ணை ஆணுக்கு நிகர் என இந்தச்சமூகத்துக்கு நிரூபித்தார்.பெண்களுக்கும் கூட அவர் தான் உணர்த்தினார்.

தன் வாழ்நாளில் அவர் நடத்தாத சீர்திருத்த திருமணங்களே இல்லை.தாலியற்ற ,வேதமற்ற உறுதிமொழி ஏற்பு விழாக்களை தமிழ்ச்சமூகத்துக்கு அறிமுகம் செய்தார்.அவரே தான்ஒரு தேவதாசி பெண்ணுக்கு தாலி அணிவித்தும் திருமணம் நடத்தினார்.
தன் தோழர்களை விதவைத்திருமணம் செய்ய வலியுறுத்தினார்.

டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி,மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் போன்றோர் சட்டமன்றத்தில் தேவதாசி ஒழிப்புச்சட்டம் குறித்து பேச தூண்டுகோலாய் இருந்தார்.தேவதாசி ஒழிப்புச்சட்டம் சத்திய மூர்த்தி அய்யரின் எதிர்ப்பை மீறி 1942 இல் சட்டமானது.

நீதிக்கட்சியின் தலைவராக பெரியார் வந்தபின் அதை தேர்தலுக்கு வெளியிலிருந்து போராடும் சமுதாய இயக்கமாக மாற்றி திராவிடர் கழகம் உருவானது.

இதன் தேர்தல் இயக்கமாக அறிஞர் அண்ணா தலைமையில் திமுக உருவானது.

திமுக வந்த பின் பெரியார் செய்து வைத்த சுயமரியாதை திருமணங்களுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கினார் அண்ணா.

பெண்கல்விக்கு இடைவெளி நீதிக்கட்சி துவங்கியது.சமூக அளவில் பெண் விடுதலைக்கருத்துகள் பரவின.பெண்களை ஒடுக்கிய தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.பெண்ணின் திருமணம் குடும்பத்திலிருந்து விலகும் சுயேட்சை முடிவு சட்ட அங்கீகாரம் பெற்றது .

பெண்கள் தான் ஆரம்பப்பள்ளி ஆசிரியராக வேண்டும் என்றார் பெரியார்.மருத்துவராக வேண்டும் என்றார்.

பெண்கள் போஸ்ட் ஆபிஸில் வேலை செய்ய வேண்டும்..போலீஸாக வேண்டும்.விமானியாக வேண்டும் என ஊர் ஊராக ப்ரச்சாரம் செய்தார்.உங்களால் முடியும் என தடி ஊன்றிய கிழவன் பெண்களின் கூன்களை தன் கருத்து தடி கொண்டு தொடர்ந்து நிமிர்த்தினார்.தன் வாழ்நாளிலேயே பல பெண்களை எழுத்தாளராக,பதிப்பாளராக,பத்திரிக்கை ஆசிரியராக உருவாக்கினார். போராட்டக்களங்களில் பெண்களை முன்னிறுத்தினார்.

அதன் பின் ஆட்சிக்கு வந்த அரசுகளுக்கும் பெண் முன்னேற்றத்தில் தொடர் அழுத்தம் தந்தார். கலைஞரின் திமுக ஆட்சிக்கு வந்த பின் பெரியாரின் சிந்தனைகள் அசுர வளர்ச்சியுடன் இங்கு சமூக கட்டமைப்பாக உருவாக்கப்பட்டது.

அனைவருக்கும் ஆரம்பப்பள்ளி கட்டாயமானது .

பெண்களுக்கு கல்வி இடை நிற்றல் தடுக்கும் திருமண உதவித்தொகை திட்டத்தை தந்தார்.பெண்குழந்தைகளை குடும்பத்தினர் பிடியிலிருந்து மீட்டு கல்விச்சாலைக்குள் நிரந்தரமாக்கிட உழைத்தார்.

பெண்கள் 8 படித்ததும் திருமணம் எனும் நிலையை மாற்றி 10-12 வரை படித்தனர்.

பின்னர் கல்விக்கடன் திட்டத்தில் கல்லூரி வாசலுக்கு அழைத்து வந்தார்.கல்லூரி வந்த பெண்களுக்கு கல்விக்கடன் ரத்தும் செய்தார்.

படித்த பெண்களுக்கான ஐடி நிறுவனத்தையும் கட்டமைத்து வைத்திருந்தார்.இன்று ஆணை விட அதிகம் சம்பாதிக்கும் தமிழ்ப்பெண்கள் உருவாக கலைஞர் தான் காரணமாகிறார்.

அம்பேத்கர் இந்துப்பெண்ணுக்கு சொத்துரிமை கேட்ட போது நேரு அமைச்சரவை நிராகரித்தது.தன் பதவியை துறந்தார் அண்ணல் அம்பேத்கர்.

திராவிடக்கலைஞர் தான் பெண்ணுக்கு சம சொத்துரிமையை சட்டமாக்கி பெண்கள் சொத்துடன் வாழ வழிவகுத்தார்.

அதன் பின் வந்த தளபதி மு.க .ஸ்டாலின் ஆட்சியில் அனைத்து குழந்தைகளும் காலை உணவு வழங்கும் திட்டம் பெண்களுக்கும் உதவிகரமான திட்டமாகும்.

அடுத்ததாக முன்பு இருந்த திருமண உதவித்தொகை திட்டம் இப்போது உயர்கல்வி உதவித்தொகை என காலத்துக்கேற்ப பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது.

மகளிர் உரிமைப்பயணத்திட்டம் அனைத்து பெண்களுக்கும் சமூகவெளியை சொந்தமாக்கி கொடுக்கும் திட்டமாக உள்ளது.கூலி வேலை முதல் பல லட்சம் பெண்களால் தினசரி கொண்டாடப்படும் திட்டமாகும்.மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டம் மூலம் பல பெண்கள் சுயமரியாதை வாழ்வு பெறுகின்றனர்.

கல்லூரி படிக்கும் வரை உதவித்தொகை,UPSC படிக்க உதவித்தொகை என திராவிடப்பெண்கள் திராவிட மாடலால் அதிக அளவு Masters படித்தும்,அதிக அளவு வேலை செய்யும் பெண்களாகவும் வளர்ந்துள்ளனர்.

அவர்களுக்கான தோழி விடுதிகள் உருவாக்கம் பெண்களை பார்ப்பனீயத்தின் இல்லறக்கொடூரத்திலிருந்து சமூகவெளி எனும் நல்லற வாழ்வுக்குள் நகர்த்தி கொண்டாடுவது திராவிட மாடல் என்றால் அது மிகையல்ல.

இன்னும் கடக்க வேண்டிய தூரம் பொது கலைஞர் சமையலறை உருவாக்கம் ,குழந்தை வளர்ப்பு,முதியோர் நலன் அரசே ஏற்கும் திட்டங்கள் என எதிர்காலமும் திராவிட மாடல் கட்டமைப்பு தான் இங்கு பெண் வளர்ச்சியை விரும்புகிறது.அதனால் பெண்கள் பெருமையுடன் சொல்லுங்கள்..We belong to Dravidian Stock.

- லோகநாயகி.S.

16.11.2025.

அறிவுக்கு மகுடம் சூட்டிய அறிவுத்திருவிழா – Rajarajan RJ

அறிவுத்திசைஅறிவிக்கும் மெய்!

2008 ல் "Outliers" எனும் ஒரு புத்தகம் வெளியாகிறது. அதை எழுதியவர் மால்கம் க்ளாட்வெல் (Malcom Gladwell) எனும் எழுத்தாளர். அந்த புத்தகத்தில் அவர் "10000 மணி நேர விதி" என்கிற ஒரு கருத்தை முன் வைக்கிறார். அந்த விதியின் படி, ஒரு மனிதன் ஒரு துறையில் உச்சத்தைத் தொடும் வெற்றியைப் பெற, 10000 மணி நேர பயிற்சி தேவை. “The Beatles" எனும் உலகப்புகழ்பெற்ற இசைக்குழு, 1960 களில் ஜெர்மனியில் இருக்கும் சிறு கிளப் களில் வாசிக்கத் தொடங்கியவர்கள், தொடர்ச்சியான பயிற்சியால் புகழின் உச்சத்தைத் தொட்டார்கள் என்கிறார்.

1960ன் இறுதியிலேயே ஒரு சிறுவனான பில் கேட்சுக்கு கணிணியை பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கிறது. அவர் தொடர்ச்சியாக அதில் ப்ரோக்ராம் செய்து பயிற்சி பெற்றதன் விளைவாகத் தான் 1975ல் மைக்ரோ சாப்ட் நிறுவனத்தை அவரால் தொடங்க முடிந்தது. 1990 களில் அவரால் உலகின் நம்பர் 1 பணக்காரராக ஆக முடிந்தது. இப்படியாக, தனது புத்தகத்தில் மால்கம் கிளாட்வெல் தனது "10000 மணி நேர விதி"யை நிறுவுவதற்காக எடுத்துக்காட்டுகளை அடுக்குகிறார்.

டைகர் உட்ஸ் (Tiger Woods) எனும் கோல்ப் பிளேயரையும் எடுத்துக்காட்டாக கிளாட்வெல் சொல்கிறார். பத்து மாதக் குழந்தையாக கோல்ப் விளையாட தொடங்கிய உட்ஸ், தனது 21 வயதிலேயே 10000 மணி நேரப் பயிற்சியை எட்டி விடுகிறார். உலகின் நம்பர் 1 வீரராக ஆகிவிட்டார் என்று தனது புத்தகத்தில் சொல்கிறார் மால்கம் கிளாட்வெல். நாம் இந்த 10000 மணி நேர விதிக்கு இசைப்புயல் ஏ ஆர் ரகுமான், இளம் இசைக்கலைஞர் லிடியன் நாதஸ்வரம் போன்றவர்களை எடுத்துக்காட்டுகளாக கொள்ளலாம்.

2019 ல் டேவிட் எப்ஸ்டின் (David Epstein) எனும் எழுத்தாளர் "Range" எனும் புத்தகத்தை எழுதுகிறார். அதில் மால்கம் கிளாட்வெல்லின் "10000 மணி நேர விதி" ஏன் அனைவருக்கும் பொருந்தாது, அதில் உள்ள பிழை என்ன? என்பதை நிறுவுகிறார்.

10000 மணி நேர பயிற்சி என்பது ஒரு சராசரியான எண் தான். பல சாதனையாளர்கள் அதற்கும் குறைவான மணி நேர பயிற்சியிலேயே உச்சத்தைத் தொட்டு இருக்கிறார்கள்.

ரோஜர் பெடெரர் (Roger Federar) டென்னிஸ் விளையாட்டில் உச்சத்தைத் தொட்டவர். ஆனால், அவரது சிறுவயதில் அவர் கால்பந்து, கூடைப்பந்து, பூப்பந்து (Badminton), பனிச்சறுக்கு, நீச்சல் என பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டு இருக்கிறார். அதன் தொடர்ச்சியாகவே அவர் டென்னிஸ் விளையாட்டிற்கும் வந்து இருக்கிறார்.

ஒரு துறையின் அறிவை இன்னொரு துறையில் செலுத்துபவர்களை "Generalist" என்று சொல்வார்கள். ரோஜர் பெடரர் ஒரு "Generalist". அவர் மற்ற விளையாட்டுகளில் கற்றுக்கொண்டதை டென்னிஸில் பயன்படுத்திக்கொண்டார் என்கிறார் டேவிட் எப்ஸ்டின்.

எப்ஸ்டின் சொல்வது, 10000 மணி நேர விதி என்பது “Kind Learning Environment" என்று சொல்லப்படும் கனிவான கற்றல் சூழல்களுக்கு பொருந்தும். அதாவது சதுரங்கப் போட்டி, பாரம்பரிய இசை போன்றவற்றிற்கு பொருந்தும். ஆனால், கடினமான அல்லது சிக்கலான கற்றல் சூழல்களுக்கு (Wicked Learning Environment), இந்த 10000 மணி நேர விதி பொருந்தாது என்கிறார். அதாவது, வணிகம், அறிவியல் துறைகள் அல்லது பல சிக்கலான விளையாட்டுகள், “விதிகள் தெளிவாக இல்லாத, மற்றும் நிலைமைகள் மாறிக்கொண்டே இருக்கும் இடங்களில்”, பல்வேறு துறைகளிலிருந்து அறிவை ஒருங்கிணைக்கக்கூடிய பொதுவாதிகள் (Generalist) சிறப்பாகச் செயல்படுகிறார்கள் என்பதை நிறுவுகிறார் டேவிட் எப்ஸ்டின்.

நம் அனைவருக்கும் தெரிந்த ஒரு ஜெனரலிஸ்ட் "கலைஞர் கருணாநிதி" அவர்கள். பல்வேறு துறையில் ஈடுபட்டு, ஒரு துறையின் அறிவை இன்னொரு துறையில் செலுத்தி, அனைத்திலும் வெற்றிபெற்றவர் டாக்டர். கலைஞர் அவர்கள்.

சரி மேற்சொன்ன இரண்டுப் புத்தகங்களுக்கும், சென்னையில் நடந்த அறிவுத்திருவிழாவிற்கும் என்ன சம்பந்தம்? சொல்கிறேன்.

2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், 10000 மணி நேர விதியைப் பிரபலப் படுத்திய மால்கம் கிளாட்வெல்லும், அந்த விதியை உடைத்த டேவிட் எப்ஸ்டீன்னும் சமூக ஊடகத்தில் ஒன்றாக உட்கார்ந்து 1 மணி நேரம் விவாதிக்கிறார்கள்.

தனது புகழ்பெற்ற ‘10000 மணி நேர விதியை” உடைத்தவர் டேவிட் எப்ஸ்டீன் என்கிற ஈகோ மால்கம் கிளாட்வெல்லிற்கு இல்லை. அப்படி இருந்திருந்தால் அந்த உரையாடலுக்கே அவர் வந்திருக்க மாட்டார். நான் ஒரு கருத்தை முன்வைத்தேன். நீ அதை மறுத்து இன்னொரு

கருத்தை முன்வைத்திருக்கிறாய். வா, இருவரும் உரையாடி நம் கருத்துகளை மெறுகேற்றி, மானுட சமூகத்திற்கான கொடையான அறிவை வழங்கலாம் என்கிற சிந்தனை தானே அவர்களை இயக்குகிறது. இவர்களது உரையாடலை பார்த்த பின், மேற்குலகம் எப்படி ஒரு அறிவுச் சமூகத்தை, அறிவியல் சமூகத்தைக் கட்டமைக்க முயல்கிறது. இப்படி ஒரு அறிவுச் சமூகமாக தமிழ்நாடு இருந்தால் எப்படி இருக்கும் என்கிற ஒரு சிந்தனை எனக்குள் எழுந்துக் கொண்டேயிருக்கும்.

ஆனால், ஒரே மேடையில் பேரறிஞர் அண்ணாவும், தமிழறிஞர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களும் கம்பராமாயணத்தை முன்வைத்து உரையாடி, விவாதம் செய்து, சொற்போர் நடத்திய நிகழ்வுகளும் நினைவுக்கு வருகின்றன. அது “தீ பரவட்டும்” என்கிற புத்தகமாக வாசிக்கவும் கிடைக்கின்றது. தமிழ்சமூகத்தை அறிவுச்சமூகமாக மாற்ற திராவிட இயக்கம் நூறாண்டுகளுக்கு மேலாக போராடி வருகின்றது. டாக்டர். தாரவத் மாதவன் அவர்களின் ஸ்பர்டங்க் சாலை பேச்சை கேட்டால், பகுத்தறிவும், தன்மான உணர்ச்சியும், சனாதன எதிர்ப்பும் நம்முள் வேர்விடும். பெரியாரிய, சுயமரியாதை மாநாடுகளில் பேசிய பெண்களின் உரைகளை படித்தால், இன்றைய பெண்ணிய கருத்துக்களுக்கான விதைகள் நூறாண்டுகளுக்கு முன்னே தூவப்பட்டிருப்பது தெரியும். பெரியாரோ, திராவிடம் 2.0, திராவிடம் 3.0 என எத்தனை வந்தாலும், அவர் எட்ட முடியாத திராவிடம் ஆல்பாவாக இருந்துக்கொண்டு நமக்கான சிந்தனை சவால்களைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்.

திராவிட இயக்கத்தின் தொடர்ச்சியான அறிவுச்செயல்பாடுகள்

திராவிட இயக்கம் தொடர்ச்சியான அறிவுச் செயல்பாடுகளை செய்து வருகின்றது. பத்திரிக்கைகள் நடத்தி, வார மாத இதழ்களை நடத்தி, தெருமுனைக் கூட்டங்களில் இருந்து கருத்தரங்க மாநாடுகள் வரை நடத்தி, தொடர்ச்சியான புத்தகங்களைப் பதிப்பித்து என தொடர்ச்சியாக ஒரு செயல்பாடு இருந்துக்கொண்டே இருக்கின்றது. அன்றைய திமுகவில் இருந்து இன்றைய திமுக வரை தொண்டரில் இருந்து தலைவர் வரை எழுதுவதையும், படிப்பதையும் தொடர்ச்சியான அறிவு செயல்பாடாகவே கொண்டுள்ளார்கள்.

திமுக ஆட்சிக்கு வரும் போதெல்லாம், இந்த செயல்பாடுகள் வீரியம் பெறும். பள்ளிக்குச் செல்லும் சிறுவனாக நான் பேருந்திற்குள் படித்த திருக்குறளும், கலைஞரின் பொன்மொழிகளும் என்னைத் தமிழின் பக்கம், திராவிடத்தின் பக்கம் திருப்பியது என்று சொன்னால் அது மிகையாகாது.

விவேகம் எனும் வெள்ளி முளைத்து

சாதிமதப்பித்து எனும் சனி தொலைந்தால் தான்
சமத்துவம் எனும் ஞாயிறு பிறக்கும்

என்கிற கலைஞரின் பொன்மொழி, எனக்குள் ஏற்படுத்திய கேள்விகளும், தாக்கமும் பெரிது.

கலைஞர் சமூகநீதியை ஒரு பக்கம் மிகத்தீவிரமாக செயல்படுத்திக்கொண்டேக் - கடைகோடித் தமிழனுக்கும் அனைத்து வாய்ப்புகளும் சென்று சேர வேண்டும் என உழைத்துக்கொண்டே, இன்னொரு பக்கம் தமிழ்சமூகத்தை ஒரு அறிவார்ந்த, அறிவியல் சார்ந்த, மானமிகு சமூகமாக மாற்றவும் முனைந்துக்கொண்டேயிருந்தார்.

அதன் வெளிப்பாடு தான் 1970களில் பாடநூல் கழகத் தலைவராக இருந்து, கம்ப்யூட்டர், செமி கன்டக்டர் குறித்து பாடம் வைத்ததில் தொடங்கி, இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ் நாட்டிற்கான தகவல் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கியது, இணையத்தில் இன்று செழித்து பரவியிருக்கும் தமிழ் மொழிக்கான ஆரம்பப் புள்ளியான யுனிகோட் முறைக்கான முன்னெடுப்பை எடுத்தது என தமிழ்சமூகத்தின் அடுத்த கட்டம் என்னவாக இருக்க வேண்டும் என சிந்தித்து செதுக்கியவர் நவீன தமிழ்நாட்டின் தந்தை டாக்டர் கலைஞர் அவர்கள்.

நன்றியுணர்ச்சி அணி

2018ல் டாக்டர் கலைஞர் மறைந்த போது, அவர் செய்த சாதனைகளை மட்டுமே ஓராண்டுகளுக்கு மேலாக பேசினோம். எந்தத் துறையை எடுத்தாலும் அவரின் சாதனைகளை அடுக்க அடுக்க நீண்டுக்கொண்டே சென்றன. அனைவரும் கலைஞரின் திட்டங்களை, அரசாணைகளை, அரசியலை, சாதனைகளை நினைவுகூர்ந்து பாராட்டினார்கள்.

இந்த காலகட்டத்தில், சமூக வலைதளத்தில் ஒரு இளைஞர் பட்டாளம் திராவிட இயக்க சார்பாக, திமுக சார்பாகக் களம் இறங்கி எழுத தொடங்கியது. கழகத்தின் எந்த அதிகாரபூர்வ அணியிலும் இல்லாத இந்த இளைஞர்கள், தங்களை "நன்றியுணர்ச்சி அணி" என்று சொல்லிக்கொள்வார்கள். திராவிட இயக்கத்தின் விளைவால், திமுகவின் சமூகநீதித் திட்டங்களால் வாழ்வில் முன்னேறியவர்கள் இவர்கள். சமூகவலைத்தளத்தில் தொடர்ச்சியாக எழுதிவந்த இந்த இளைஞர்கள், ஓமானில் இருக்கும் மருத்துவர் சென் பாலன் அவர்கள் அமேசான் நடத்திய கிண்டில் புத்தகப் போட்டியில், தனது "பரங்கிமலை ரயில் நிலையம்" புத்தகத்திற்காக முதல் பரிசைப் பெற்றதன் தொடர்ச்சியாக பல இளைஞர்களும் கிண்டிலில் புத்தகம் எழுதிப் பதிப்பிக்க தொடங்கினார்கள். கிண்டில் திராவிடத்தின் வசம் ஆனது.

2019ல், ஒரே மேடையில் நூறு கிண்டில் புத்தகங்கள், அன்பகத்தில் வெளியிடப்பட்டது.

அப்படி நான் எழுதிய புத்தகம் "பாகிஸ்தானில் என்ன பேசிக்கொள்கிறார்கள்?". இது தான் எனது முதல் புத்தகம்.

2020ல் கொரோனா பெருந்தொற்று காலத்தில், கழகத்தின் இளைஞரணிச் செயலாளர், மாண்புமிகு. துணை முதலமைச்சர் அவர்கள், வாசிக்க சில புத்தகங்களை பரிந்துரைச் செய்ய சொல்லி கேட்க, அதில் என் புத்தகத்தையும் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் அண்ணன் புதுக்கோட்டை அப்துல்லா அவர்கள் பரிந்துரைச் செய்ய, என் புத்தகத்தை படித்துவிட்டு என்னை அழைத்து இளைஞரணிச் செயலாளர் அவர்கள் பேசினார்கள், பாராட்டினார்கள். புத்தகத்தை அறிமுகம் செய்து, வாழ்த்தி தனது சமூக வலைத்தளத்திலும் எழுதினார்கள்.

அவர் தந்த ஊக்கம் என்னை மேலும் எழுத வைத்தது. 2021ல், “திராவிட நம்பிக்கை மு. க. ஸ்டாலின், தொண்டர் முதல் தலைவர் வரை” எனும் புத்தகத்தை எழுத முடிந்தது. அதை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் புத்தகச் சந்தையில் வெளியிட்டார்கள். 2022ல், ஒரே மேடையில் 8 புத்தகங்களை என்னால் வெளியிட முடிந்தது. அதில் ஒரு புத்தகத்தின் பெயர் "இளைய தலைமுறையின் புதிய திராவிடம்”. சிங்கப்பூரில் இருந்து மாதம் ஒருமுறை, திராவிட வாசிப்பு எனும் மின்னிதழை நடத்தி வருகிறோம். அதில் எண்ணற்ற இளைஞர்கள் எழுதி வருகிறார்கள். அப்படி எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு தான் "இளைய தலைமுறையின் புதிய திராவிடம்" என்கிற புத்தகமாக வெளியானது.

இளைஞர்களின் நம்பிக்கை நாயகன்

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் ஊக்கம் தான் என்னைப் போன்ற எண்ணற்ற இளைஞர்களை மென்மேலும் உழைக்க வைக்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல. பள்ளி கல்லூரி மாணவர்கள், விளையாட்டுத் துறையில் சாதனைப் படைக்கும் இளைஞர்கள், பத்திரிக்கை ஊடகத் துறையில் இருக்கும் இளைஞர்கள், சமூக நல செயல்பாட்டாளர்கள் என அனைத்து துறையில் இருந்தும் பலரோடும் நமது துணை முதலமைச்சர் அவர்கள் தனிப்பட்ட வகையில் பழகி, அவர்களின் பிரச்சனைகளைக் கேட்டறிந்து, அதை சரி செய்து, அவர்களுக்கான உதவியை, ஊக்கத்தைத் தந்துவருவதைத் தொடர்ந்து பார்த்து வருகிறோம். தமிழ்நாட்டின் வரலாற்றில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் பொற்காலம் இது தான் என்று சொல்ல வேண்டும். தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு ஆதர்சமாக,

நம்பிக்கை நட்சத்திரமாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து வருகிறார். அதன் இன்னொரு எடுத்துக்காட்டு தான் அறிவுத் திருவிழா!

கழகத்தின் அறிவுப்பாய்ச்சல்

திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு. முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின், கலைஞர் பாணியில் ஒருபுறம் சமூக நீதித் திட்டங்கள், அனைவருக்கும் அனைத்தும் என்கிற முழக்கத்தோடு, இந்தியாவையே திரும்பிப் பார்க்கவைக்கும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். வெளிநாட்டில் வாழும் என்னை போன்றோர், இங்கிருக்கும் பிற நாட்டினரிடம் எங்கள் ஊரில், பெண்களுக்கு அரசு பேருந்தில் இலவசப் பயணம் என்று சொல்லும் போது, அவர்கள் வியப்பதைப் பார்த்து மகிழ்கிறோம். விடியல் பயணம், மகளிர் உரிமைத்தொகை, வீடு தேடி மருத்துவம், நான் முதல்வன், உங்களுடன் ஸ்டாலின் என "உலகிற்கே" வழிகாட்டும் பல திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு. முதலமைச்சர் அவர்கள் - இன்னொரு புறம் கல்வியை, குறிப்பாக பகுத்தறிவு வெளிச்சத்தை கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டுக் சேர்க்கும் முனைப்புடன் செயலாற்றுவதையும் பார்த்து மகிழ்கிறோம்.

அறிவகம் கண்டார் அண்ணா,
அண்ணா அறிவாலயத்தையும், அண்ணா நூற்றாண்டு நூலகத்தையும் கண்டார் கலைஞர்,
கலைஞர் நூற்றாண்டு நூலகங்களை அமைக்கிறார் திராவிட மாடல் நாயகர்.

சால்வைகளுக்கு பதிலாகப் புத்தகங்களை அன்பளிப்பாகத் தரச்சொன்ன ஒரு சின்ன அறிவிப்பு - எத்தனைப் பெரிய மாற்றங்களை கொண்டு வந்தது என்பதைக் கண்முன்னே பார்க்கிறோம்.

டீ கடைகளிலும், முடி திருத்தகங்களிலும் செய்தித்தாள் படித்து, மாத வார இதழ் படித்து, புத்தகங்கள் படித்து, பேசி உரையாடி, விவாதித்து வளர்ந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். இன்று நமது ஆட்சியில், திரும்பிய பக்கமெல்லாம் "படிப்பகங்கள்" இருக்கிறது என்று சொல்லும் அளவுக்கு அறிவுப்பாய்ச்சலை நிகழ்த்தி வருகிறோம். உலகத்தர நவீன நூலகங்கள், பூங்கா, பேருந்து நிலையங்களில் படிப்பகங்கள் என மக்களை வாசிப்பை நோக்கி, பகுத்தறிவை நோக்கி நகர்த்தி வருகிறது திராவிட மாடல் அரசு. சமீபத்தில் தஞ்சாவூர் பேருந்து நிலையத்தில் பேருந்திற்காக காத்திருக்கும் பயணிகள் படிப்பதற்காக மினி நூலகம் திறக்கப்பட்டிருக்கும் செய்தியை பார்த்து மகிழ்ந்தோம்! இப்படி பலப்பல முன்னெடுப்புகளை எடுத்து மக்களுக்கு அறிவொளி பாய்ச்சினால், எதிரிகளுக்கு நடுக்கம் வரத்தானே செய்யும்!

மகுடமான அறிவுத் திருவிழா

அறிவுத் திருவிழா என்பது ஒரு தற்செயல் நிகழ்வல்ல. மேற்சொன்ன திராவிட இயக்கத்தின் தொடர்ச்சியான அறிவு செயல்பாடுகளின் மகுடம் தான் நவம்பர் 8ல் தொடங்கி நவம்பர் 16 வரை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்த "அறிவுத் திருவிழா" நிகழ்வு.

திராவிட இயக்க மரபை மட்டும் அல்ல, அதன் அடுத்தகட்டத்தையும் காட்டி இருக்கிறது இந்த "அறிவுத்திருவிழா".

1. காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூல் வெளியீடு - தமிழ்நாட்டின் தலைவர்கள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், செயல்பாட்டாளர்களைக் கொண்டு எழுதப்பட்ட நூல். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றை மட்டுமல்ல, தமிழ்நாட்டு வளர்ச்சியின் ஆவண சாட்சியாகவும் இந்த புத்தகம் திகழும்.

2. இருவண்ணக் கொடிக்கு வயது 75, இருநாள் கருத்தரங்கம் - பத்து அமர்வுகள் தமிழ்நாட்டின் தலைசிறந்த 44 பேச்சாளர்கள் கொண்டு நடத்தப்பட்ட கருத்தரங்கம். இன்னும் வாசிக்கத் தொடங்காத இன்றைய தலைமுறையிடம் திராவிடத்தைக் கொண்டுச் சேர்த்த நிகழ்வு இது.

3. முற்போக்கு புத்தகக் காட்சி மற்றும் மாலை நேர நிகழ்ச்சி - சென்னையில் ஒவ்வொரு ஆண்டு நடக்கும் புத்தகத்திருவிழாவில் பெரியாரிய, அம்பேத்கரிய, இடதுசாரி கருத்துகள் கொண்டப் புத்தகங்கள் அதிகமாக விற்பனை ஆவதை செய்திகளில் பார்த்து வருவோம். ஆனால், முற்போக்கு புத்தகத் திருவிழா என்பது பலராலும் யோசிக்க முடியாதது. யோசிக்க முடிந்தாலும், செயல்படுத்த முடியாதது. ஆனால், யோசித்தும் செயல்படுத்தியும் காட்டி இருக்கின்றது திராவிட முன்னேற்றக் கழகம். செயல்படுத்தி காட்டியிருக்கிறார் கழகத்தின் இளைஞரணிச் செயலாளர். இந்த விசயத்திலும் இந்தியாவிற்கு வழிகாட்டியாக இருக்கப்போவது நாம் தான்.

மாலை நேரத்தில் நடந்த கலைநிகழ்ச்சி மட்டும் உரைவீச்சு - கலைஞர் கட்டிய அழகிய வள்ளுவர் கோட்ட பின்னணியில் வெளியான படங்களை பார்த்த போது திராவிடர் பண்பாட்டு அரசியல், தமிழர் அற அரசியல் உணர்வு மேலெழுந்தது.

தமிழ்நாட்டிற்கென ஒரு சிந்தனை மரபு இருக்கின்றது. சித்தர் மரபு, பக்தி இலக்கிய மரபு, சிரமண மதங்களான பௌத்தம், ஜைனம், ஆசிவகம் காட்டிய மரபு, பண்டிதர் அயோத்தி தாசர்,

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், பேராசிரியர் லட்சுமி நரசு போன்றவர்கள் காட்டிய மரபு என நமது பகுத்தறிவு சனாதன எதிர்ப்பு மரபு பெரியது. அதன் அடுத்தக்கட்ட பாய்ச்சலை நிகழ்த்தியது தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் மற்றும் திராவிடர் கழகமும், பேரறிஞர் அண்ணா தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகமும்.

இந்த சிந்தனை மரபின் மகுடம் தான் அறிவுத்திருவிழா!

முற்போக்கு புத்தகக் கண்காட்சியில் திராவிட இயக்க புத்தகங்களை மட்டுமல்லாமல் மற்ற முற்போக்கு இயக்க புத்தகங்களும், பதிப்பகங்களும் இருக்க வேண்டும் என்று வழிகாட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அதை செயல்படுத்திய துணை முதலமைச்சர் அவர்களும் நமக்கு சொல்லும் செய்தி இது தான்.

“நான் ஒரு கருத்தை முன்வைக்கிறேன். நீ அதை மறுத்து/விமர்சித்து இன்னொரு கருத்தை முன்வைத்திருக்கிறாய். வா, இருவரும் உரையாடி நம் கருத்துகளை மெறுகேற்றி, மானுட சமூகத்திற்கான கொடையான அறிவை வழங்கலாம்”!

கருத்து சுதந்திரம் கொண்ட, ஜனநாயக ரீதியிலான, அறிவார்ந்த, அறிவியல் சார்ந்த ஒரு சமூகத்தைக் கட்டமைக்க இந்த “அறிவுத்திருவிழா” ஒரு பலமான அடித்தளத்தை இடும். எண்ணற்ற கழக பேச்சாளர்களை உருவாக்கிய இளைஞரணிச் செயலாளர், இனி எண்ணற்ற இளம் எழுத்தாளர்களை, சிந்தனையாளர்களை உருவாக்க இருக்கிறார்.

இனி, ஆண்டுதோறும் இந்த அறிவுத்திருவிழாவை நடத்த வேண்டும் என்று கழகத்தலைவர் அவர்கள் ஆணையிட, நாங்கள் வெவ்வேறு மாவட்டங்களில் இனி இதை நடத்தப் போகிறோம் என இளைஞரணிச் செயலாளர் உறுதியளித்து இருக்கிறார்!

அறிவாசான் தந்தை பெரியார் வழியில்
பேரறிஞர் அண்ணா அவர்கள் இட்ட அடித்தளத்தில்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உறுதியோடு
மாண்புமிகு கழகத்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் பயணிக்கும் கழக இளைஞரணிச் செயலாளருக்கு மனமார்ந்த வாழ்த்துகள்!

1962 ஆம் ஆண்டில், பேரறிஞர் அண்ணா, மாநிலங்களவையில் தனது முதல் பேச்சில் குறிப்பிட்ட,

“I say that I belong to the Dravidian stock and that is only because I consider that the Dravidians have got something concrete, something distinct, something different to offer to the nation at large.”

நான் என்னைத் திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லிக்கொள்ளும் போது திராவிடனிடம் இந்த உலகத்திற்கு வழங்க திட்டவட்டமான தெளிவான மற்றவைகளிடமிருந்து வேறுபட்ட சில இருக்கின்றன என்று கருதுகிறேன்.

இந்த சொற்களுக்கு ஏற்ப, இன்றும் இயங்கிக்கொண்டு இருக்கும் ஒரே அறிவுசார் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே!

- ராஜராஜன் ஆர்.ஜெ

அறிவுத் திருவிழா - சுந்தரவாணன் பாண்டியன்

தமிழ்நாடு எப்போதும் கல்வி, அறிவு, சமத்துவம் ஆகியவற்றில் இந்தியாவிற்கே முன்னோடியாக திகழ்கிறது. அந்த மரபைத் தொடரும் விதமாக இப்போது தமிழ்நாடு அரசு மிகப்பெரிய அளவில் “அறிவுத் திருவிழா”வை வெற்றிகரமாக நடத்தியது.

சென்னையின் இதயத்தில் வள்ளுவர் கோட்டத்தில் நடந்து முடிந்த ஒரு வரலாற்று பெருவிழா – அது வெறும் வெற்றி விழாக்கொண்டாட்டமோ, புத்தகக் கண்காட்சியோ அல்ல; அது ஒரு சிந்தனையின் திருவிழா.

இந்த விழா நம்மை வாசிக்க, யோசிக்க, பேசிக்கொள்ள, புரிந்துகொள்ள ஊக்குவிக்கிறது. ஒவ்வொருவரும் தமது மனதில் புதிய சிந்தனையின் விதை விதைக்க முடிகிறது. இந்த விழாவை நிச்சயம் “ஒரு கருத்தின் பண்டிகை” என அழைக்கலாம்.

இந்தியாவில் எந்த ஒரு கட்சியோ இயக்கமோ தங்கள் வெள்ளிவிழாவையோ, பொன்விழாவையோ, பவள விழாவையோ இப்படி ஒரு ஆக்கப்பூர்வமான வகையில் கொண்டாடியதில்லை.

தி.மு.க 75ஆவது ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு முக்கிய அத்தியாயம் என்ற பெருமையுடன், “அறிவுத் திருவிழா” எனப் பெயரிடப்பட்ட இந்நிகழ்ச்சி, தமிழின் பெருமையும், மனித நேயமும், கல்வியறிவின் ஒளியும் ஒன்றிணைந்த ஒரு விழாவாக மாறியுள்ளது.

அறிவின் வெளிச்சம் தான் சமுதாயத்தை முன்னேற்றும் சக்தி.
பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்நாளெல்லாம் அதையே வலியுறுத்தினார்

இன்று அந்த எண்ணமே ஒரு விழாவாக உயிர்ப்பெடுத்து, சென்னையின் இதயத்தில் மக்களை ஒன்றிணைத்திருக்கிறது.

அறிவுத் திருவிழா – ஒரு கருத்தின் பண்டிகை

“அறிவுத் திருவிழா” என்பது வெறும் புத்தக விற்பனை நிலையம் அல்ல. அது அறிவை பகிர்ந்து மகிழும் மேடை. இங்கே புத்தகங்கள் விற்கப்படுவதில்லை, அறிவே பரிமாறப்படுகிறது.

புத்தக வாசனை, அரங்கின் சத்தம், குழந்தைகளின் ஆர்வம், இளைஞர்களின் உற்சாகம் — ஒவ்வொன்றும் ஒன்றிணைந்து ஒரு சமூக விழிப்புணர்வை உருவாக்குகிறது.

விழாவின் நோக்கம் – கல்வி, அறிவு, சமத்துவம்

அறிவுத் திருவிழா நடத்தப்படுவதற்கான முக்கிய நோக்கம் —
மக்களிடையே வாசிப்பு, சிந்தனை, கலந்துரையாடல் என்ற பண்பை வளர்த்தல். மக்களின் வாழ்க்கையில் கல்வி, அறிவு, சுயமரியாதை ஆகியவற்றின் அவசியத்தை உணர்த்தல்.

பகுத்தறியும் திறனில்லா கல்வி வீணானது, அத்தகைய அறிவில்லா சுதந்திரம் அபாயமானது ; இதை சரிசெய்யும் வகையில் இவ்விழா அமைந்துள்ளது.

ஒரு சிறுமி “பெண் ஏன் அடிமையானாள்?” வாங்குகிறாள்.
ஒரு இளைஞன் “திராவிட இயக்கம் மற்றும் அறிவியல் சிந்தனை” என்ற புத்தகத்தைப் படிக்கிறான்;
ஒரு முதியவர் “அண்ணா உரைகள் தொகுப்பு” என்பதைக் கவனமாகப் புரட்டுகிறார் —
இது தான் இந்த விழாவின் உயிர்.

பகுத்தறிவு வயதைக் கடந்து அனைவரையும் இணைக்கிறது.

ஒரு புத்தகம் வாசிக்கும் சிறுமி முதல் ஒரு ஆய்வுக்கட்டுரை வாசிக்கும் பேராசிரியர் வரை அனைவருக்கும் இந்த விழா புதிய உந்துசக்தியை அளிக்கிறது.

அறிவின் அரங்குகள் – உரைகள் மற்றும் கலந்துரையாடல்கள்

விழாவில் தினந்தோறும் நடக்கும் கருத்தரங்குகள் அறிவு விருந்தாக மாறியுள்ளன.
இளம் எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், — அனைவரும் கலந்துரையாடும் மேடையாக உருவாகியுள்ளது.

ஒவ்வொரு உரையிலும் அண்ணாவின் குரல் ஒலிக்கிறது.

அறிவு என்றால் வெறும் புத்தகத்தில் மட்டுமல்ல;
அதைப் பயன்படுத்தி சமுதாயத்தை மாற்றும் ஆற்றல் தான் உண்மையான அறிவு என்பதை நினைவூட்டும் நிகழ்வாக இது திகழ்கிறது.

அறிவுத் திருவிழாவின் அனைத்து அமைப்புகளிலும், கடைகளிலும்,
தன்னார்வலர்கள், மாணவர்கள், இளம் தொண்டர்கள் என பல பேர் ஈடுபட்டுள்ளனர்.அவர்கள் முகத்தில் ஒளிரும் நம்பிக்கை –
அண்ணாவின் வழி இன்னும் உயிரோடு இருப்பதற்கான சான்று.

திராவிட இளைஞர்கள் புத்தகங்கள் விற்கவில்லை;
அவர்கள் அறிவை பரிமாறுகிறார்கள்.
அவர்கள் விழாவை நடத்தவில்லை;
ஒரு தலைமுறை விழிப்புணர்வை உருவாக்குகிறார்கள்.

இந்த அறிவுத் திருவிழா அண்ணாவின் சிந்தனையை புத்தகங்களாக, உரைகளாக, நிகழ்ச்சிகளாக உயிர்ப்பிக்கிறது.

இந்த விழா முடிந்தாலும், அதன் தாக்கம் தொடரும்.
ஒரு புத்தகம் படிக்கப்பட்டது என்றால்,
ஒரு சிந்தனை விதைக்கப்பட்டாகிவிட்டது.

அறிவுத் திருவிழா என்பது தி.மு.க 75 ஆண்டுகளின் உண்மையான கொண்டாட்டம்.

இது வெறும் நிகழ்ச்சி அல்ல, ஒரு அறிவுப்புரட்சி.

இந்த விழாவை நமக்காக நல்ஏற்பாடு செய்து கொள்கை வழி காட்டும் தோழர்.திரு. மானமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

The Hidden Agenda Behind "Lifestyle Coaching": Repackaging Right-Wing Ideology – Tam Femme

Home-schooling influencer **Durgesh Nandhini** has triggered widespread outrage after making deeply insensitive remarks about sexual assault victims. In a closed session, she said that women must "respect and take care of their bodies" to avoid abuse, implying that neglect invites assault. Even more disturbingly, she claimed that the abuse of infants "as young as two or six months old" happens due to their previous birth's karma.

At first glance, this might seem like yet another instance of victim-blaming in a patriarchal society. But her mention of "karma" points to something larger — a moral framework rooted in religious hierarchy and right-wing ideology that normalizes inequality and shifts blame onto victims.

The Ideological Layer Beneath Lifestyle Coaching

Nandhini's comments are not isolated. They reflect how certain ideologically driven communities use "self-improvement," "minimalism," and "parenting" classes to subtly spread regressive beliefs. These groups often detach from their parent organizations and operate independently, which makes it difficult for the public to see them as part of a larger ideological project.

Nandhini, who calls herself a minimalist, charges large fees for her courses while urging women not to pursue careers so they can "present themselves fully to their children." This message is hypocritical. She herself is a working mother of three. One of her clients reported that her sessions extend beyond minimalism, promoting veganism as the "pure" diet and claiming that non-vegan foods increase "sexual arousal," which she bizarrely links to sexual violence.

Such narratives are not just pseudoscience. They echo Hindutva moral codes that regulate women's bodies and behavior. Concepts like **karma** and **dharma** are used to justify caste hierarchies under Sanatana Dharma, where suffering and subjugation are seen as deserved consequences of past lives. When such beliefs are dressed up as

lifestyle advice, they normalize gender violence, casteism, and inequality — especially among upper and upper-middle-class women with social media influence.

The Coimbatore Parenting Network Connection

Nandhini was also associated with the **Coimbatore Parenting Network (CPN)** — not sure about her current status, but she was taking classes under their banner whose members have promoted "natural birthing" and "birth villages." These spaces romanticize unassisted childbirth and discourage hospital births, endangering maternal health and undermining public efforts to reduce mortality.

The glorification of "natural birth" not only pressures women who undergo C-sections but also creates an exclusionary class divide, as only the wealthy can afford such "wellness retreats." In another instance, a CPN associated "Maya's Amma", advised women to "sync their menstrual cycles with the moon," a baseless claim that still gains traction among those who trust these so-called coaches.

Image: Durgesh Nandhini's minimalism class announcement in CPN page.

These trends reveal a pattern spiritualized pseudoscience being used to promote control over women's choices, framed as "nature" or "tradition."

The "Trad Wife" Trend: Choice or Conditioning?

This ideological repackaging extends beyond parenting. The rise of the "trad wife" trend, where women voluntarily embrace traditional gender roles under the banner of "choice feminism," is another example. These influencers romanticize domesticity, encouraging women to find purpose solely in caring for their families.

However, these portrayals are far from realistic. Most "trad wives" come from privilege. They can devote hours to cooking or crafting only because of invisible domestic labor provided by maids. Ironically, while they preach against women having careers, they themselves monetize this image through brand deals and online content creation.

For ordinary working women, this creates immense psychological pressure, feeding guilt for not being "traditional enough." In a society like India, still navigating the transition toward gender equality and autonomy, these trends subtly pull women back into the very role's feminism helped them escape.

The Danger of Ideological Packaging

Parenting and lifestyle networks like these must be scrutinized closely. They often target women during vulnerable periods, pregnancy, postpartum recovery, or early motherhood when emotional and physical exhaustion make them more susceptible to manipulation. Wrapped in the language of empowerment and wellness, these teachings spread regressive, casteist, and patriarchal ideas that harm not only women but society at large.

Progressive and liberal organizations must call out these networks openly. When women are led to internalize these narratives, the entire project of social progress slows down. No society can advance when half its population is conditioned to accept submission as virtue.

Durgesh Nandhini's remarks are not just offensive; they are a symptom of a larger ideological strategy that hides behind "self-help" and "lifestyle" language. What

appears harmless at first glance is, in fact, a mechanism to reinforce hierarchy, restrict women's agency, and justify inequality. To counter this, critical thinking, scientific awareness, and feminist solidarity are essential — because no truly progressive society can exist without women who are free to think, question, and choose for themselves.

- Tam Femme

டூட் - Genz தலைமுறையின் மொழியில் பெரியாரின் குரல் – Rajarajan RJ

2025 ஆம் ஆண்டின் அக்டோபர் மாதத்தில் வெளியான "Dude" எனும் தமிழ் திரைப்படம் genz தலைமுறையின் பெரியாரிய குரலாக ஒலித்து இருக்கின்றது.

இயக்குனர் கீர்த்திஸ்வரன் இயக்கத்தில், பிரதீப் ரங்கநாதன், மமிதா பைஜு, சரத்குமார், ரோகிணி ஆகியோரின் நடிப்பில் வெளியாகி வெற்றிப்பெற்று இருக்கும் படம் “டூட்”. இயக்குனர் கீர்த்திஸ்வரன் அவர்களுக்கு இது முதல் படம். முதல் படத்திலேயே ஜாதி எதிர்ப்பு, அகமணமுறை எதிர்ப்பு, பெண்ணடிமை எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, மிக முக்கியமாக ஜாதி ஆணவக்கொலைக்கு எதிரான வலுவான கருத்து என தனது முத்திரையை கீர்த்தீஸ்வரன் பதிவு செய்து இருக்கிறார். பிரதீப் ரங்கநாதன் - இன்றைய இளம் தலைமுறையான Genz களால் கொண்டாடப்படும் நடிகராக/ இயக்குனராக இருக்கிறார். அவரது கோமாளி, லவ் டுடே, டிராகன் ஆகிய மூன்று படங்களும் இன்றைய இளம் தலைமுறையால் கொண்டாடப்பட்ட படம். ட்ராகன் படத்தில் "படிப்பின்" முக்கியத்துவத்தை Genz மொழியில் எடுத்துரைத்திருந்தனர். அவரது அடுத்த வெற்றிப்படமாக "Dude” வெளியாகி கொண்டாடப்பட்டு வருகின்றது.

முற்போக்கு அம்சங்கள் கொண்ட இன்னொரு படம் இது என கடந்து போய் இருக்கலாம். ஆனால், இந்த படத்திற்கு "கலாச்சார காவலர்களால்" எழுப்பப்பட்ட கண்டன குரல்களே இந்த கட்டுரையை எழுதவேண்டிய தேவையை உணர்த்தியது.

ஏன் இந்த படம் முக்கியமானது?
ஏன் இந்த படம் எதிர்க்கப்படுகிறது?

இரண்டிற்குமான விடையில் சில ஒற்றுமைகள் இருக்கின்றன.

ஜாதி எதிர்ப்பு பேசும், மூடநம்பிக்கை எதிர்ப்பு பேசும், முற்போக்கு கருத்துகளை பேசும் படங்கள் நிறைய வந்தவண்ணம் இருக்கின்றன. இதே சிலமாதங்களில் வெளியான மாரிசெல்வராஜ் அவர்களின் "பைசன் - காளமாடன்" திரைப்படமும், அருண் பிரபு அவர்களின் "சக்தி திருமகன்" திரைப்படமும் ஜாதி எதிர்ப்பு பேசும் முற்போக்கு படங்களே. குறிப்பாக சக்தி திருமகன்

நேரடியாக பெரியாரை, சுவரெழுத்து சுப்பையா அவர்களை ஒரு கதாபாத்திரமாக்கி பேசுகின்றது.

ஆனால், இந்த படங்களில் இருந்து "Dude " திரைப்படம் எங்கே வேறுபடுகின்றது என்றால், அது ஜாதி எதிர்ப்பை, ஜாதி ஆணவக்கொலை எதிர்ப்பை, மூடநம்பிக்கை எதிர்ப்பை, பெண்ணடித்தன்மை எதிர்ப்பை ஒரு பிரச்சாரமாக செய்யாமல் ஒரு பகடியாக செய்கின்றது.

படத்தின் முதல் காட்சியிலேயே, பிரதீப் தனது முன்னாள் காதலியின் திருமணத்திற்கு வருகிறார். திருமணம் முடிந்து அந்த பெண்ணும் அவரது கணவரும் இருக்கிறார்கள். பிரதீப் தன்னை ஏன் அந்த பெண் வேண்டாம் என்று சொன்னார் என அவரிடமே கேட்கிறார். பேசிக்கொண்டு இருக்கும் போதே தவறுதலாக அந்த பெண்ணின் தாலி அறுந்து பிரதீப்பின் கையில் வந்து விடுகிறது. அதன் பிறகு ஒரே களேபரம் நடக்கிறது. இவை அனைத்தும் படத்தை பார்க்கும் பார்வையாளர்களால் விழுந்து விழுந்து சிரிக்க வைக்கிறது.

படம் முழுவதும் இந்த தாலி என்னும் விஷயத்தை நகைச்சுவையாக கொண்டு சென்று இருக்கிறார்கள். படத்தின் பிற்பகுதியில் ஒரு காட்சியில் பிரதீப் மீண்டும் அந்த முன்னாள் காதலியை சந்திக்கும் போது, அதே தாலி குறித்து பேச்சு வரும் போது, அந்த பெண்ணின் கணவன், இந்தா உன் தாலி, பெட் ரூமிலேயே விட்டு வந்துட்ட என்று எடுத்து வந்து கொடுப்பார். அதற்கும் பார்வையாளர்கள் அரங்கம் அதிர சிரித்தார்கள்.

இப்படியாக பழமைவாதிகள் பல்லாண்டுகாலமாக பாதுகாத்து வந்த தாலி சென்டிமென்ட்டை நகைச்சுவையாக கடந்து செல்கிறது இப்படம். நிஜ வாழ்விலும் இன்றைய பெண்கள் தாலி என்பதை ஒரு நகையாக மட்டுமே அணிகிறார்கள் என்பதால் தான் தமிழ் மக்களால் இந்த காட்சிகளை இயல்பாக சிரித்து கடக்க முடிகிறது என்பதும் உண்மை.

இப்படி படம் முழுக்க பல காட்சிகள் பகடியாக இருப்பதால் தான், பழமைவாதிகளால் இப்படம் எதிர்க்கப்படுகிறது. அவர்களால் திரையரங்கில் பெரும்பான்மை மக்களால் இந்த காட்சிகள் ரசிக்கப்படுவதையும் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

படத்தின் நாயகி குறள் எனும் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் மமிதா மற்றும் அகன் எனும் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் பிரதீப். இருவரும் உறவினர்கள். சிறு வயதில் இருந்தே நண்பர்களாக பழகுகிறார்கள். அகனின் நிறுவனத்தில் தான் குறளும் பணிபுரிகிறார். மமிதாவின் தந்தை சரத்குமார், பால்வளத்துறை அமைச்சராக இருக்கிறார். குறள் அகனை ஒருதலையாக காதலிக்கிறார். அவரிடம் தன் காதலையும் சொல்கிறார். ஆனால், அகன்

தன்னால் குறளை நண்பராக மட்டுமே பார்க்கமுடிகிறது, காதலியாக பார்க்கமுடியவில்லை என்று சொல்லிவிடுகிறார். குறள் காதல் தோல்வியில் உடைந்துவிடுகிறார். அகன் நிறுவனத்தில் இருந்து வெளியேறி, ஊரை விட்டு வெளியேறி விடுகிறார்.

குறள் சென்ற சிலமாதங்களுக்கு பின் தான், அகன் தனது காதலை உணர்கிறார். தனது மாமா சரத்குமாரிடம் சென்று சொல்கிறார். சரத்குமார் தான் குறளிடம் பேசுவதாக சொல்கிறார்.

திருமணம் ஏற்பாடு செய்யப்படுகிறது. குறள் மீண்டும் வருகிறார். வந்தவர், தான் இன்னொருவனை விரும்புவதாக சொல்கிறார். அந்த இன்னொரு பையனுக்காக உயிரை விடவும் குறள் தயாராக இருக்கிறார் என்பதை பார்த்த அகன், குறளின் காதலை சேர்த்துவைக்க நினைக்கிறார். நீயே சென்று உன் தந்தையுடன் சொல்லி திருமணத்தை நிறுத்தி, உனக்கு பிடித்தவனை திருமணம் செய்துக்கொள் என அகன் சொல்கிறார்.

அதன் படி, குறள் தன் தந்தையிடம் சென்று பேசும்போது தான் தந்தையின் இன்னொரு கொடூர முகம் தெரிகிறது. ஜாதிக்காக தன் தங்கையையே கொன்று அதன் மூலம் அரசியலில் செல்வாக்கு பெற்று அதிகாரத்தில் இருக்கும் ஒரு கொடூரமான ஜாதி வெறியன் தான் குறளின் தந்தை சரத்குமார் என்னும் உண்மை குறளுக்கும், அகனுக்கும் தெரிகிறது. அங்கிருந்து அகன் எப்படி குறளை அவரது காதலரோடு சேர்த்துவைக்கிறார் என்பது தான் கதை.

ஒரு சராசரியான தமிழ் படத்தில் இத்தனை காலம் நாம் பார்த்த பல பிம்பங்களை இப்படம் உடைத்து இருக்கிறது.

கே. பாக்கியராஜின் பிரபலமான வசனமான "என் காதலி உங்கள் மனைவியாகலாம், உங்கள் மனைவி என் காதலியாக முடியாது" என்பதை உடைத்து..தாலி முக்கியமில்லையா மாப்ள என சரத்குமார் கேட்கும் போது, தாலியை விட, அதை தாங்கி நிற்கும் பெண்ணின் உணர்வு தான் முக்கியம் என பிரதீப் பேசும் வசனம் தானே நூறாண்டுகளுக்கு முன்னால் பெரியாரின் குரலாக இருந்தது? இந்த வசனத்திற்கு எழும் கைத்தட்டு பெரியாருக்கான வெற்றி தானே!!

குடும்பமானம், ஊர் பேச்சு, நாலு பேர் நாலு விதமாக பேசுவார்கள் என இங்கே கட்டிவைக்கப்பட்டிருக்கும் வெத்து பிம்பங்களை சுக்குநூறாக உடைத்து இருக்கிறது “டூட்" திரைப்படம்.

இந்த 2025லும் லவ் பண்ணா, தன் பெண்ணை வெட்டுவேன் ன்னு சொல்ற அப்பாவும் அம்மாவும், அதை பார்த்து சும்மா இருக்கும் இந்த சமூகமும் தான் ஆபாசமானது என்று பிரதீப் பேசும் போது அரங்கமே கைதட்டலால் அதிர்கிறது.

குறிப்பாக, "சொந்தம் விட்டுப் போகணும் மாமா", வெளிய போய் புது சொந்தங்களைக் கொண்டு வரணும் மாமா' - (ஜாதி மறுப்புத் திருமணங்களால்) 'கவுரவம் கெடுகிறது என்றால் நீங்க சாவுங்கடா" போன்ற வசனங்கள் சூப்பர். திருமணம் ஆன உடன் பிரதீப்பின் தாயான ரோகிணி, "பெண்ணை அனுசரித்து போ" என திருமணம் ஆன ஆணுக்கு அறிவுரை கூறும் அந்த முழு ஷாட்டும் தமிழ் சினிமாவுக்கே புதிது.

படத்தில் சில குறைகளும் இருக்கின்றன. சில இரட்டை அர்த்த வசனங்களை தவிர்த்து இருக்கலாம். ஆனால், genz மொழியில் ஜாதி எதிர்ப்பை, ஆணவக்கொலைக்கு எதிரான குரலை, அகமணமுறை - தாலி சென்டிமெண்ட்டிற்கு எதிரான குரலை, முற்போக்கு பெரியாரிய கருத்துக்களை கொண்டு சேர்த்ததற்காகவே இந்த திரைப்படத்தை நாம் எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந்தப்படம் இன்னும் பல ஆண்டுகளுக்கு பேசுபொருளாக இருக்கும். வாய்ப்பிருப்பவர்கள் அவசியம் இத்திரைப்படத்தை பார்க்கவும்.

படத்தின் வெற்றிவிழாவில் பேசிய இயக்குனர் கீர்த்தீஸ்வரன் - இந்த படம் பற்றி நிறைய விவாதங்கள் உருவாகியிருக்கு. இதுவரை பேசாத விஷயம் சொல்லி இருக்காங்க... அப்படின்னு.

இது தமிழ்நாடு, இந்த ஸ்டேட்ல நிறைய பெரியவங்க இருந்திருக்காங்க. பெரியாரும் இருந்திருக்கார். அவங்க வழியிலதான் நாங்கல்லாம் பேசிட்டு இருக்கோம். தமிழ்நாட்டில் இதைப் பேசுவது புதிது இல்லை, இதற்கு முன்னும் பேசியிருக்காங்க. நாங்க அடுத்த தலைமுறைக்கு சொல்லுவோம்.

இதை எவ்வளவு பொழுதுபோக்கா, சினிமா மொழியில, பார்வையாளர்களுக்கு ஏத்துக்கிற மாதிரி, பெரிய ஸ்கேல்ல சொல்ல முடியுமோ அப்படி சொல்ல முயற்சி பண்ணிட்டு இருப்பேன்." எனப் பேசியுள்ளார்.

படத்தின் இயக்குனர் கீர்த்தீஸ்வரன் அவர்களையும், இப்படத்தில் நடித்த நடிகர் நடிகைகளையும் பாராட்டுவோம்!

- Rajarajan RJ

Rosa Parks — “Do I?” - Nagammal Sethuraman

Do I deserve to be treated with dignity, no matter where I sit, walk, or live?

Rosa Parks’ quiet defiance reminds us the answer is always “YES.”

We often ask ourselves: Do I matter? Do I belong? Do I have a voice?

In 1955, Rosa Parks answered these questions on a Montgomery bus when she was told to give up her seat to a white passenger. At the time, racial segregation was enforced in every part of public life—schools, buses, restaurants, theatres, restrooms, and even drinking fountains. These laws were designed to keep African Americans and White Americans separate and unequal.

She quietly said “NO.”

That simple act of courage sparked the Montgomery Bus Boycott.

She was arrested on December 1, 1955, in Montgomery, Alabama, charged with violating the city’s segregation laws (Jim Crow laws), and fined $10 plus $4 in court costs—significant at the time. She spent a few hours in jail before being bailed out by local civil rights leaders.

The boycott—a sustained community protest that lasted 381 days—was led by Dr. Martin Luther King Jr. and the local Black community. It became a turning point in the civil rights movement, pressuring the courts to rule in 1956 that bus segregation was unconstitutional. This ruling helped reshape U.S. public policy on segregation.

The bus she rode is now preserved as a symbol of everyday courage. Rosa Parks became known as the “Mother of the Civil Rights Movement.”

So the next time you whisper, “Do I?”

Listen for the answer she gave: “YES, YOU DO.”

If this story moves you, share it. And tell us: What small “NO” did you say that mattered—something that changed your life? Share below.

So… what’s your “Do I?”

- Nagammal Sethuraman

“Where Do We Belong?” – A Glimpse Into Today’s India -

Nagammal Sethuraman

Every morning, my helper from West Bengal arrives quietly, carrying more than just her bag. She carries a fear that has begun to shape the lives of millions across our country — a fear of not belonging in the very land they were born in.

She works hard, like thousands of lower-middle-class people who leave their states to survive. She washes dishes, sweeps floors, and sends money home so her children can dream bigger dreams. India is her home. India is her identity.

But today, her voice trembles.

Last week she told me, “Didi, I must go back to my village… just to make sure my name is still there. What if I go to vote and find it missing? What if I am told I don’t belong here anymore? What is my fault?”

In that one question — “What is my fault?” — lies the silent fear of countless families.

People who travel hundreds of kilometers for work are now travelling back again, not for festivals, not for weddings, but for assurance. Assurance that their existence is recorded. Assurance that their voice still counts. Assurance that they still have a place in the only country they have ever known.

This isn’t about big speeches, political slogans, or who supports whom. This is about the beating hearts of ordinary citizens — cleaners, drivers, construction workers, delivery boys, house helps — who feel the ground beneath them shifting.

It’s about the fear of being unseen.

Unheard.

Uncounted.

And when she asks me, “Didi, if they don’t want us, where will we go?” I have no answer. Because there is no other place for her.Because belonging is not something you earn — it is something you are born with.

And because every citizen, every voter, every voice matters.

This is not a story about politics.

This is a story about people.

And maybe it is time we pause, listen to these unheard voices, and ask ourselves:

How can fear exist in a place we all call home?

- Nagammal Sethuraman